இந்திய அரசு
நிதி அமைச்சகம், வருமான வரித்துறை
வரி மீட்பு அதிகாரி அலுவலகம் - 1 & 2, வருமானவரி அலுவலகம்,
2, வி.பி. ரத்தினசாமி நாடார் சாலை, பீ.பீ.குளம்,
மதுரை - 625 002. தொலைபேசி எண்: 0452-2530571

## ஏல விற்பனை அறிவிப்பு (திரையரங்கம்)

மதுரை மாவட்டம், அரசரடி, மதுரை-625 016, ஏ.ஏ ரோடு, எண் 9 ல் வசித்து வரும் **திருமதி. எம். ஜெயா, திரு. டி.எம். மகேஸ்வரன் மற்றும் திரு. டி.எம். வெங்கடேஸ்வரன்** அவர்களிடமிருந்து வர வேண்டிய வருமான வரி பாக்கி (அதற்குரிய வட்டி மற்றும் ஏலச் செலவுத் தொகை உள்பட) மொத்தமாக **ரூ. 2,17,34,019/-** யை வசூல் செய்வதற்காக, மேற்படி நபர்களுக்குச் சொந்தமான விவர அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள **"மனை இடமும் அதில் கட்டப்பட்டுள்ள ஜெயம் திரையரங்கமும் சேர்த்து" மதுரை வருமானவரி அலுவலகம், அறை எண். ஏ.310, பேரவை அரங்கம், மூன்றாவது தளம், எண். 2, வி.பி.ரத்தினசாமி நாடார் சாலை, பீ.பீ.குளம், மதுரை - 625 002 என்ற முகவரியில், வருகின்ற 11.10.2018, வியாழக்கிழமை அன்று காலை 11.00 மணி அளவில்** பகிங்கர ஏலத்தில் விற்பனை செய்யப்பட உள்ளது.

நடைபெறவுள்ள ஏலத்தில் பங்கு கொள்ள விருப்பமுள்ள ஏலதாரர்கள், ஏலக் கையடைத்தொகை - **ரூ.3,50,000/-ஐ** (திருப்பி அளிக்க கூடியது) மதுரையில் மாற்றத்தக்க, ஏதேனும் ஒரு தேசிய வங்கியில் மாற்றத்தக்கதான வரைவோலையாக, **"Tax Recovery Officers 1 & 2, Madurai"** என்ற பெயருக்கு எடுத்து வரவேண்டும். மேற்படி சொத்து **"உள்ளது உள்ளபடியே"** நிலையில் ஏலம் விடப்படும்.

## சொத்து விவரம்

மதுரை மாவட்டம், மாடக்குளம் கிராமம், மதுரை, பைபாஸ் சாலை, பழங்காநத்தம், ரீசர்வே எண். **155/4ஏ1, 155/4ஏ2 மற்றும் 155/5ஏ ல் உள்ள 51.24 செண்டு "மனை இடமும் அதில் கட்டப்பட்டுள்ள ஜெயம் திரையரங்கமும்" இதற்கு நான்குமால்**

| | |
|---|---|
| <u>வடக்கே</u> - ரீசர்வே எண் 155/4ஏ1-ல் கட்டுப்பட்ட நிலம்<br><u>தெற்கே</u> - ஜானகியம்மாள் மற்றும் பி. சீதையம்மாளுக்குப் பாத்தியப்பட்ட மனையிடம் | <u>கிழக்கே</u> - ரீசர்வே எண் 155/4ஏ-ல் கட்டுப்பட்ட மனையிடமும் கிழமேல் நடைபாதையும்<br><u>மேற்கே</u>- ராமனாதன் அய்யர் விற்ற இடம் |

## சொத்தின் உத்தேச மார்க்கெட் மதிப்பு : ரூ.4,25,88,000/-

இந்த ஏலம் சம்பந்தகாக மேலும் விவரங்கள் அறிய அலுவலக நாட்களில் கீழே குறிப்பிட்டுள்ள அதிகாரிகளைத் தொடர்பு கொள்ளலாம் அல்லது **www.incometaxindia.gov.in / www.tnincometax.gov.in** என்ற இணைய தளத்திலிருந்து ஷரத்துக்கள் மற்றும் நிபந்தனைகளை பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.

R.S. [signature]
**(ஆர்.எஸ். சுப்புலெட்சுமி)**
**வரி மீட்பு அதிகாரி -1, மதுரை**
**(கைபேசி எண் 9445955908)**

[signature]
**(அ. உதயசேகர்)**
**வரி மீட்பு அதிகாரி -2, மதுரை**
**(கைபேசி எண் 9445955824)**

**இந்திய அரசு**
**நிதி அமைச்சகம், வருமான வரித்துறை**
**வரி மீட்பு அதிகாரி அலுவலகம் 1 & 2, வருமானவரி அலுவலகம்,**
**வி.பி. ரத்தினசாமி நாடார் சாலை,பீ.பீ.குளம், மதுரை - 625 002**
**தொலைபேசி எண்: 0452-2530571**

## ஏல விற்பனை அறிவிப்பு

மதுரை மாவட்டம் , மதுரை-625 016 , அரசரடி ,ஏ.ஏ. ரோடு , எண் 9ல் வசித்து வரும் **திருமதி எம் , ஜெயா , திரு டி.எம். மகேஸ்வரன் மற்றும் திரு டி.எம். வெங்கடேஸ்வரன்** அவர்களிடமிருந்து வர வேண்டிய வருமானவரி பாக்கி (அதற்குரிய வட்டி மற்றும் ஏலச் செலவுத் தொகை உள்பட) மொத்தம் **ரூ. 2,17,34,019/-** யை வசூல் செய்வதற்காக மேற்படி நபர்களுக்கு விவர அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள **“மனை இடமும் அதில் கட்டப்பட்டுள்ள ஜெயம் திரையரங்கமும்”** மதுரை வருமானவரி அலுவலகம், எண். 2 வி.பி.ரத்தினசாமி நாடார் சாலை, பீ.பீ.குளம், மதுரை 625 002 **(அறை எண். ஏ.310, பேரவைஅரங்கம், மூன்றாவது தளம்)** இல் **திரு. பாடித போது ராஜு மற்றும் திரு. ப. மாரியப்பன் , வரி மீட்பு ஆய்வாளர்கள் அவர்களால்** 11.10.2018 **வியாழக்கிழமை அன்று காலை 11.00 மணிக்கு** பகிங்கர ஏலத்தில் விற்பனை செய்யப்பட உள்ளது.

## ஷரத்துக்களும் நிபந்தனைகளும்

ஏல விற்பனைக்கென்று முடிவு செய்யப்பட்ட நாள் **11.10.2018** அன்று திருமதி மா. ஜெயா அவர்களுக்கு **Rs.1,12,85,694/-** **ம், திரு.** து.மா. மகேஸ்வரன் அவர்களுக்கு **Rs.65,26,153/-** **ம், திரு து.மா. வெங்கடேஸ்வரன்** அவர்களுக்கு **Rs.39,22,172/-** ம் முறையே வருமான வரி அலுவலகத்திற்கு செலுத்த வேண்டிய பாக்கியாக ( வரி, வட்டி, செலவுகள் அனைத்தும் உட்பட) நிலுவையில் இருக்கும்.

விற்பனையின்போது, நேரடியாகவோ அல்லது முறையான அதிகாரம் பெற்ற முகவர் மூலமாகவோ வந்திருந்து விலை கேட்க, பொதுமக்கள் அழைக்கப்படுகிறார்கள்.

எனினும், இந்த விற்பனைக்குத் தொடர்பான ஒரு பணியைச் செய்யும் எந்த அதிகாரியும் அல்லது பிறநபர்களும், விற்கப்படும் சொத்தில் உள்ள யாதொன்றினைப் பற்றியும் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ விலை கேட்கக்கூடாது, அடையக்கூடாது அல்லது அடையும் முயற்ச்சியும் எடுக்கக்கூடாது.

1961-ம் ஆண்டு வருமானவரிச் சட்டத்தின் 2வது விவர அட்டவணையில் முடிவு செய்துள்ள நிபந்தனைகளுக்கும், அதன் கீழ் செய்துள்ள விதிகளில் கண்டுள்ள நிபந்தனைகளுக்கும் மேற்கொண்டு விதித்துள்ள கீழ்காணும் நிபந்தனைகளுக்கும் இந்த விற்பனை உட்பட்டதாகும்.

….2

1. இதில் குறிப்பிட்டுள்ள விவரங்கள் இந்த அலுவலகத்திற்கு நன்கு தெரிந்துள்ள தகவல்களையொட்டி அமைந்துள்ளன என்று தெரிவிக்கப் படுகிறது. இந்த அறிவிப்பில் ஏதேனும் பிழை, தவறான தகவல் அல்லது விடுபாடு இருப்பின் அதற்கு இந்த அலுவலகம் பொறுப்பாளியாகாது.

   1.(a). **சொத்தின் குறைந்தபட்ச மதிப்பு ரூ.3,18,75,000/- (ரூபாய் மூன்று கோடியே பதினெட்டு லட்சத்து எழுபத்தி ஐந்தாயிரம் மட்டும்) ஆகும்.**

2. ஏலத்தில் பங்கு கொள்ள விருப்பமுள்ள ஏலதாரர்கள், ஏலக் கையடைத்தொகை - ரூ. **3,50,000/- ஐ ,** மதுரையில் மாற்றத்தக்க ஏதேனும் ஒரு தேசிய வங்கியின் வரைவோலையாக **"Tax Recovery Officers 1 & 2, Madurai"** என்ற பெயருக்கு செலுத்தத்தக்கதாக, ஏலம் ஆரம்பமாகும் முன், வரி மீட்பு அய்வாளர்களிடம் ஒப்படைக்க வேண்டும். இந்த வரைவோலை ஏலம் எடுக்காதவர்களுக்கு ஏலத்தின் முடிவில் திருப்பி அளிக்கப்படும். ஏலம் எடுப்பவர்களுக்கு ஏலத்தொகையில் கழித்துக் கொள்ளப்படும்.

3. எந்த தொகைகள் மூலம், விலை கூறும் தொகைகள் அதிகரிக்கப்பட வேண்டும் என்பதை விற்பனை செய்யும் அதிகாரிகள் முடிவு செய்வார். விலை கேட்கப்படும் தொகை அல்லது விலை கேட்பவர் குறித்து தகராறு, பிரச்சனை ஏதேனும் எழுந்தால், அவை அதிகாரிகளால் தவிர்க்கப்பட்டு சொத்து இனம் உடனடியாக மீண்டும் ஏலத்திற்கு விடப்படும்.

4. அதிக விலை கேட்பவர், நிபந்தனைகளுக்கு உட்பட்டு சொத்தை வாங்கியவராக அறிவிக்கப்படுவார். ஆனால், அவர் விலை கேட்பதற்கு எப்போதும் சட்டப்படி தகுதி உள்ளவராக இருக்க வேண்டும். மேலும் கேட்கப்படும் அதிக விலை, குறிப்பிட்ட விலை ஏதேனும் முடிவு செய்யப்பட்டிருந்தால் அதற்கு குறைவானதாக இருக்கும் பட்சத்தில் அல்லது கொடுக்க முன்வரும் விலையை ஏற்றுக்கொள்வது பொருத்தமல்ல என்ற அளவுக்கு போதுமானதாக இல்லாத பட்சத்தில், ஏலம் நடத்துபவர் அவ்வாறு கேட்கப்பட்ட அதிக விலையை ஏற்க மறுப்பதற்கு அதிகாரம் உள்ளவர் ஆவார்.

5. 1961-ம் ஆண்டு வருமான வரிச் சட்டத்தின் 2வது விவர அட்டவணையில் கண்டுள்ள விதிகளுக்கு உட்பட்டு எப்போதும் விற்பனை நடத்தும் அதிகாரி தமது விருப்பப்படி அந்த விற்பனையை ஒத்திப் போடலாம். அதற்கான காரணங்களை அவர் எழுதி வைக்க வேண்டும். மறு ஏலம் 30 நாட்களுக்குள் நடக்கும்பட்சத்தில் புதிய விற்பனை அறிக்கை அளிக்கப்படமாட்டாது.

6. சொத்தை வாங்கியவரென்று அறிவிக்கப்பட்டவர் அவ்வாறு அறிவிக்கப்பட்ட பிறகு **உடனடியாக** தாம் சொத்தினை வாங்கச் **செலுத்த வேண்டிய** பணத்தில் 25 **சதவீத தொகையை (25%)** விற்பனை நடத்தும் அதிகாரிக்கு **மதுரையில் மாற்றத்தக்க ஏதேனும் ஒரு தேசிய வங்கியின் வரைவோலையாக ""Tax Recovery Officers 1 & 2, Madurai"** எனக்குறிப்பிட்டு செலுத்த வேண்டும். **ஏலம், வங்கி வேலை நேரத்திற்குப் பின் நிறைவு பெற்றால்,** சொத்தை வாங்கியவரென்று அறிவிக்கப்பட்டவர்,

சொத்தினை வாங்கச் **செலுத்த வேண்டிய** பணத்தில் 25 **சதவீத தொகையை** விற்பனை நடத்தும் **அதிகாரியிடம்** **கோடிட்ட காசோலையாக** **"Tax Recovery Officers 1 & 2, Madurai"** எனக்குறிப்பிட்டு அளிக்க வேண்டும், **அந்த காசோலை அடுத்த வேலை நாள் அன்று வரைவோலையாக மாற்றப்பட வேண்டும்** . அவ்வாறு செலுத்த தவறினால், அந்த சொத்து உடனடியாக மீண்டும் விற்பனைக்கு கொண்டு வரப்பட்டு விற்கப்படும். சொத்தை வாங்க செலுத்த வேண்டிய **மீதி 75% பணத்தையும்** + ஏலத்தொகையில் முதல் ரூபாய் ஆயிரம் **(**Rs. 1000**)** வரை **2%** ம், ரூபாய் 1000 **-க்கு** மேற்பட்ட தொகைக்கு **1% -** ம் , பவுண்டேஜ் (Poundage) கட்டணமாகவும், **Tax Recovery Officers 1 & 2, Madurai யிடம்**, அந்த சொத்தின் ஏல விற்பனை நாளிலிருந்து 15ம் நாள் அன்றோ அல்லது அதற்கு முன்பாகவோ (15-ம் நாள் விடுமுறையாக இருந்தால் அடுத்த வேலை நாளில்) செலுத்த வேண்டும்.

7. மேலே குறிப்பிட்டுள்ள கால அளவுக்குள் பணத்தைச் செலுத்தத் தவறினால், **அந்த** விற்பனை குறித்து மீண்டும் அறிவிப்பு வெளியிட்ட பிறகு அந்தச் சொத்து மீண்டும் **ஏலம் மூலமாக** விற்கப்படும். கையடைத் தொகை விற்பனைச் செலவுகளைச் செய்த பிறகு, இந்த அலுவலகம் தகுதியென்று கருதினால் அரசிற்கு **சென்றடையும்**. அந்த உடைமையை வாங்கி, பணம் செலுத்தத் தவறுபவர் மேற்படி சொத்து குறித்து, அல்லது அது பின்னர் எத்தொகைக்கு விற்கப்படக்கூடுமோ அத்தொகையின் ஒரு பகுதி குறித்து எல்லா உரிமைகளையும் இழந்து விடுவார்.

8. விவர அட்டவணையில் **கொடுக்கப்பட்டுள்ள** சொத்துக்களுக்கு தொடர்பான பொறுப்புகளும் உரிமை கோரிக்கைகளும் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன.

9. இந்த அலுவலகத்திற்கு நன்றாக தெரிந்துள்ள தகவலின்படி மதுரை மாநகராட்சிக்கு வரி செலுத்த தவறியர்களிடமிருந்து **சொத்து** வரி பாக்கியாக : **ரூ**. 5,71,154/-, **குழாய் கட்டணம்** : **ரூ** 9,000/- **பாதாள சாக்கடை பராமரிப்பு கட்டணம்** : **ரூ** 27,000/- **மற்றும் தொழில் வரி** **ரூ**. 11,100/-, **மொத்தமாக ரூ**. **6,18,254/-** நிலுவையில் உள்ளது. மேலும் இது தவிர எந்த ஒரு வரிபாக்கியும் இருப்பதாகத் தெரிய வரவில்லை. ஏலத் தொகையில் வருமானவரி பாக்கி போக மீதம் இருந்தால் அந்தப் பணத்திலிருந்து மேற்கூறிய வீட்டுவரி, குழாய்வரி மற்றும் இதர வரிகள் ஏதேனும் இருப்பின் அவைகளும் செலுத்தப்படும். மீதம் இல்லாத பட்சத்தில் அந்த தொகைகளைச் செலுத்துவது ஏலம் எடுப்பவரின் பொறுப்பாகும்.

10. விற்பனையின் போது அதிகாரம் பெற்ற முகவர் மூலமாக வந்திருந்து விலை கேட்பவர்கள், யாருக்காக ஏலம் கேட்கிறார்களோ அவர்களிடமிருந்து பெற்ற **அத்தாட்சிச் சான்றிதழையும்** கொண்டு வரவேண்டும்.

....4

11. ஏலம் கேட்பவர் ஒவ்வொருவரும் தங்களது பெயர் மற்றும் முழுமுகவரியையும், மேலும் அவர்கள் யாருக்காக ஏலம் கேட்கிறார்களோ அவர்களது பெயர், வயது, முழுமுகவரி, தொழில் மற்றும் தொலைபேசி/ கைபேசி எண் ஆகியவற்றை ஏலம் நடைபெறும் தினத்தன்று கொடுக்கப்படும் பதிவுப் படிவத்தில் தெளிவாகக் குறிப்பிட வேண்டும்.

12. இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட நபர்கள் ஒன்றிணைந்து ஏலம் கேட்டால், எந்த விகிதத்தில் அவர்களது பங்குத்தொகை உள்ளது என்பது பற்றிய விவரங்களை அவர்கள் ஏலம் நடைபெறும் போதே குறிப்பிட்டு இருக்க வேண்டும். தவறும் பட்சத்தில் அவர்களது பங்குத்தொகை சரிசம விகிதத்தில் உள்ளது என்று எடுத்துக் கொள்ளப்படும். அவர்கள் ஏலம் எடுத்தால் ஒரே ஒரு விற்பனைச் சான்றிதழ் மட்டுமே வழங்கப்படும். ஆனால் அவர்களது பங்கு விகிதம் விற்பனை சான்றிதழில் குறிப்பிடப்பட்டிருக்கும்.

13. எந்த ஒரு காரணத்திற்காகவும் ஏலத்தில் பங்கேற்பவர்கள் ஏலத்தில் பங்கேற்றதற்கா**ன** எந்த ஒரு செலவையோ, கட்டணத்தையோ அளிக்கும்படி கோர முடியாது . இது போல் நீதிமன்றம் உட்பட எந்த ஓர் அதிகாரம் பெற்ற அமைப்பிடம் இருந்தும் ஏலத்தை ஒத்திவைப்பு அல்லது நிறுத்திவைப்பு ஆணை பிறப்பிக்கப்பட்டால், அதற்காக ஏலத்தில் பங்கேற்பவர்கள் எந்த ஒரு நஷ்டஈடும் கோர உரிமை கிடையாது.

14. ஏலம் நடக்கும் இடத்தில் இருப்பதும், ஏலத்தில் பங்கேற்பதும் இதில் குறிப்பிட்டுள்ள ஏல நிபந்தனைகளை ஒப்புக்கொண்டதாகக் கருதப்படும். தகுதி உள்ள நபர்கள் மட்டுமே ஏலத்தில் பங்கேற்க அனுமதிக்கப்படுவார்கள்.

15. எந்த ஒரு நபரையும், ஏலம் நடக்குமிடத்திலிருந்து வெளியேற்றுவதற்கு ஏலம் நடத்துபவருக்கு உரிமை உண்டு.

16. ஏலம் நடந்து 30 நாட்களுக்குப் பிறகு மட்டுமே விற்பனைச் சான்றிதழ் அளிக்கப்பட்டு, விற்பனை உறுதி செய்யப்படும். **30 நாட்களுக்குள், வரி பாக்கித் தொகை முழுவதையும் பணம் செலுத்த தவறியவர்கள் செலுத்தி விட்டால், விற்பனை ரத்து செய்யப்படும்.**

17. ஏதேனும் காரணங்களுக்காக விற்பனை உறுதி செய்யப்படாமல் தள்ளி வைக்கப்பட்டால் ஏலத் தொகை வரி மீட்பு அதிகாரிகள் முடிவு செய்யும் வட்டித் தொகையுடன் ஏலம் எடுத்தவர்க்கு திருப்பி அளிக்கப்படும்.

18. **ஏல விற்பனை உறுதி செய்யப்படாமல் வருமானவரி கணக்கில் செலுத்தப்படமாட்டாது.**

19. ஏல விற்பனை உறுதி செய்யப்பட்டபிறகு அதற்கு ஒரு சான்றிதழ் படிவம் ITCP 20 ல் வழங்கப்படும். இந்த சான்றிதழின் அசல் பிரதி முத்திரைத்தாள் தீர்வைக்கு உட்பட்டதாகும். மேலும் அதன் நகல் ஒன்று, ரூபாய் 4.50/- கட்டணத்திற்கு சார் பதிவாளர்க்கு அனுப்பப்படும். இந்த கட்டணங்களை ஏலம் எடுப்பவரே ஏற்றுக் கொள்ள வேண்டும். **விற்பனைச் சான்றிதழின் அசல், சொத்தின் உரிமை பத்திரம் (Title Deed) ஆகும். அது விற்பனைப் பத்திரத்திற்குச் சமமானதாகும்.**

மேலும் அதற்குப் பத்திரப் பதிவு ஏதும் தேவையில்லை. இதன் மூலம் ஏலம் எடுப்பவர் பதிவாளர் அலுவலக செலவுகள் எதுவும் செய்யத்தேவையில்லை. இந்த அலுவலகத்திலிருந்தே விற்பனைச் சான்றிதழின் நகல் உரிய சார் பதிவாளருக்கு அவருடைய பதிவேடுகளில் பதிவு செய்வதற்காக அனுப்பப்படும்.

20. விற்பனை உறுதி செய்யப்பட்ட பிறகு, மேலும் விற்பனைச் சான்றிதழ் வழங்கப்பட்ட பிறகு, சொத்து உள்ள பகுதியில் ''ஏலம் எடுத்தவர் விற்பனை செய்த நாளிலிருந்து சொத்தின் உரிமையாளர் ஆகிறார்'' என்று தண்டோரா போடுவதன் மூலம் சொத்து ஏலம் எடுத்தவரிடம் ஒப்படைக்கப்படும்.

21. ஒருவேளை சொத்தில் வாடகைதாரர் யாரும் இருந்தால் இந்த அலுவலகம் வாடகைதாரரை காலி செய்யவைக்காது. ஆனால் ஏலம் எடுத்தவரே அந்த சொத்தின் உரிமையாளர் என்று **ஓர்** ஆணை மூலம் பிரகடணடப்படுத்தும். அந்த ஆணையை வாடகைதாரரிடம் வழங்கி அந்தச் சொத்தில் ஒட்டப்பட்டு அதன் ஷரத்துக்கள் தண்டோரா போடப்படும். வாடகைதாரர் இதன் மூலம் தானாகவே ஏலம் எடுத்தவரின் வாடகைதாரர் ஆகிவிடுவார். இதனால் ஏலம் எடுத்தவருக்கு சட்டப்படி வாடகைதாரர் மீது நடவடிக்கை எடுக்க உரிமை உண்டு. ஒருவேளை வரி செலுத்தத் தவறியவரோ அல்லது அவர் சார்பில் வாடகைதாரராக இல்லாத மற்றவரோ அந்த சொத்தை அனுபவித்து வந்தால் ஏலம் எடுத்தவர் சொத்தை **உடைமையாக்கிக்** கொள்ள முழு உரிமை உண்டு. வரி செலுத்தத் தவறியவரோ அல்லது அவரது சார்பில் மற்றவரோ அதை தடுத்தால் ஏலம் எடுத்தவர் இந்த அலுவலகத்தில், விதி 39, வருமானவரிச் சான்றிதழ் நடவடிக்கை விதிகள் 1962ன்படி மனு செய்தால் வரி செலுத்தத் தவறியவரை அல்லது அவரது சார்பில் அந்தச் சொத்தை அனுபவித்து வருபவரை, சொத்திலிருந்து காலி செய்ய நடவடிக்கை எடுக்கப்படும்.

22. ஏலச் சொத்துக்களின் உத்தேச மார்க்கெட் மதிப்பு ரூ.**4,25,88,000/-** (ரூபாய் நான்கு கோடியே இருபத்திஐந்து லட்சத்து எண்பத்திஎட்டு ஆயிரம் மட்டும்)

23. **இணை சார்பதிவாளர்** IV **பழங்காநத்தம்** அவர்களது வில்லங்க சான்றிதழின்படி வருமானவரி பாக்கி தவிர சொத்தில் வேறு எதுவும் வில்லங்கங்கள் இல்லை.

24. **சார்பதிவாளர் அவர்களால் சான்றளிக்கப்பட்ட விற்பனை ஒப்பந்தப் பத்திரத்தின் நகல் இந்த அலுவலகத்தில் உள்ளது**. **சொத்தை வாங்க விருப்பமுள்ளவர்கள், முன் அனுமதி பெற்று, அலுவலக வேலை நேரத்தில், பத்திரத்தை** பார்வையிடலாம்.

25. **ஏலம் விட உள்ள சொத்தை** பார்வையிட விரும்புபவர்கள் **08/10/2018**, **திங்கட்கிழமை** முற்பகல் 11.00 **மணி முதல் பிற்பகல்** 3.00 **மணிக்குள்** வரி மீட்பு அதிகாரி-1 **அல்லது** வரி மீட்பு அதிகாரி-2, மதுரையைத் தொடர்பு கொள்ளலாம்.

26. இந்த ஏல விற்பனைக்குரிய விற்பனை அறிக்கை **விளம்பரம்** 28-09-2018 **"THE HINDU" ஆங்கில** நாளிதழிலும், 01-10-2018 தேதியிட்ட **"தினமலர்"** தமிழ் நாளிதழிலும் பிரசுரிக்கப்பட்டுள்ளது.

27. இந்த அலுவலகத்திற்குத் தெரிந்த தகவலின்படி விவர அட்டவணையில் உள்ள சொத்துக்களைப் பொறுத்தவரை நில ஆர்ஜிதத்துறையிலிருந்து எந்த ஒரு அறிவிப்பும் செய்யப்படவில்லை.

28. சொத்துவிவர அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள சொத்தானது வருமானவரித்துறை மதிப்பீட்டு அலுவலரால் ஆய்வு செய்யப்பட்டு சொத்தின் மதிப்பு ரூ.**4,25,88,000/-** என்று மதிப்பீட்டு அறிக்கை கொடுக்கப்பட்டுள்ளது.

29. இந்த ஏலம் சம்பந்தமாக ஏதேனும் சந்தேகம் இருப்பின் வரி மீட்பு அதிகாரி-1 அல்லது வரி மீட்பு அதிகாரி-2, மதுரை அவர்களைத் தொடர்பு கொள்ளலாம்.

30. மேற்படி சொத்து **"உள்ளது உள்ளபடியே"** நிலையில் ஏலம் விடப்படும்.

31. ஏலம் கேட்பவர்கள் தங்களது அசல் புகைப்பட அடையாள அட்டைகளான, பாஸ்போர்ட், ஓட்டுனர் உரிமம், குடும்ப அட்டை, வருமானவரி நிரந்தர கணக்கு எண் அட்டை, ஆதார் அட்டை ஆகியவற்றில் ஏதேனும் ஒன்றை, கொண்டு வரவேண்டும்.

## சொத்து விவரம்

மதுரை தெற்குப்பதிவு , மதுரை 4ம் நம்பர் இணைசார்பதிவகம், மதுரை தெற்கு வட்டம், அயன்27ம் நம்பர், மாடக்குளம் கிராமம், உள்கடை பழங்காநத்தம் அயன்நஞ்சை ரீசர்வே எண். **155/4ஏ1, 155/4ஏ2 மற்றும் 155/5ஏ** ல் ஏக்கர் 1 செண்டு 17-3/8ல் கட்டப்பட்ட மொத்தச்சொத்தில் ஒரு பகுதி மேல்புறத்தில் தென்புறம் செண்டு 51.24 **உள்ள "மனை இடமும் அதில் கட்டப்பட்டுள்ள ஜெயம் திரையரங்கக் கட்டிடமும் (முன்பு நடராஜ் தியேட்டர்) சேர்த்து". இதற்கு நான்குமால்**

| | |
|---|---|
| வடக்கே - ரீசர்வே எண் 155/4ஏ1-ல் கட்டுப்பட்ட நிலம்<br>தெற்கே - ஜானகியம்மாள் மற்றும் பி.சீதையம்மாளுக்குப் பாத்தியப்பட்ட மனையிடம் | கிழக்கே - ரீசர்வே எண் 155/4ஏ-ல் கட்டுப்பட்ட மனையிடமும் கிழமேல் நடைபாதையும்<br>மேற்கே- ராமனாதன் அய்யர் விற்ற இடம் |

***## தமிழ் பதிப்பில் ஏதேனும் பிழைகள் இருந்தால், ஆங்கில பதிப்பே இறுதியானது.***

R.S. Subbu

**(ஆர்.எஸ்.சுப்புலெட்சுமி)**

**வரி மீட்பு அதிகாரி -1, மதுரை**

**(கைபேசி எண் 9445955908)**

**(அ. உதயசேகர்)**

**வரி மீட்பு அதிகாரி -2, மதுரை**

**(கைபேசி எண் 9445955824)**